(ஆ) அரசு விழாக்களில் உறுப்பினர்கள் பங்கேற்கும் வாய்ப்பு.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விழாக்களில், அந்தந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களைப் போடவேண்டும் என்ற அரசு உத்தரவு இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களும் இந்தச் சபையிலே அடிக்கடிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மே 1 ஆம் தேதி எங்கள் பேரூராட்சியிலிருந்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் திறப்பு, தீயணைப்பு நிலைய ஆரம்ப விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் பெயர் போடப்படவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நியாயம் வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருடைய பெயரைப் போட்டு அவரை அழையுங்கள் என்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அவருடைய பெயர் இல்லாவிட்டால் அந்த நிகழ்ச்சியை ரத்துச் செய்யுமாறுக் கேட்டுக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) மதுரை பசுமலை மகாலட்சுமி மில் மூடப்பட்டிருத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. மாரிமுத்து, கே. சுப்பராயன், சு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், ஆர். ரெங்கசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் அதை கொண்டு வருவார்.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை பசுமலை மகாலட்சுமி மில் கடந்த 60 நாட்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ளதால் சுமார் 1,200 தொழிலாளர் குடும்பங்கள் துன்பப்படுகின்ற நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: